[2015 செப்டம்பர் 3

220—

கம்பிவட ஊர்தி

***52045 திரு. சி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காட்டின் அடிவாரத்திலிருந்து மலைக்கு மேலே செல்ல கம்பிவட ஊர்தி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டிலுள்ள கோடை வாசஸ்தலங்களான ஊட்டி, கொடைக்கானல், ஏலகிரி, ஏற்காடு மற்றும் கொல்லிமலை ஆகிய இடங்களில் கம்பிவட ஊர்தி அமைப்பது குறித்து தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம்மூலம் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கிருஷ்ணன் அவர்கள்.*

திரு. சி. கிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வெற்றிமீது வெற்றி வந்து நம்மைச் சேரும், அதை வாங்கித் தந்த பெருமையெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும்' (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

காடையாம்பட்டி பகுதி மலைவாழ் மக்களும், தாழ்த்தப்பட்ட மக்களும் அதிகம் வசிக்கும் பகுதி. இன்றைக்கு ஓமலூர் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, காடையாம்பட்டியைத் தனி வட்டமாக அறிவித்ததற்காக (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள்

2015 செப்டம்பர் 3]

மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் சார்பாகவும், என் சார்பாகவும், ஓமலூர் தொகுதி மக்கள் சார்பாகவும் மாண்புமிகு இதய தெய்வம், எங்கள் குல தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 'இல்லை, தெரியாது, நடக்காது' என்ற வார்த்தைகளைத் தமிழ் அகராதியிலிருந்து எடுத்துவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு, எண்ணிலடங்கா பல்வேறு சாதனைகளைச் செய்து வருகிறார்கள். காவேரி நதிநீர்ப் பிரச்சினையாகட்டும், முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையாகட்டும், இவற்றுக்கெல்லாம் மிகத் தெளிவான முறையில், இந்தியத் துணைக் கண்டத்திலேயே யாராலும் தீர்க்க முடியாத மிகப் பெரிய பிரச்சினைகளைத் தீர்த்து, வெற்றிவாகை சூடியிருக்கின்றார் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஏற்காடு மலைக்குக் கம்பிவட ஊர்தி அமைக்கும் திட்டத்திற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அறிவித்திருக்கின்ற மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுக்கும், 'கேளுங்கள் கொடுக்கப்படும்; தட்டுங்கள் திறக்கப்படும்' என்று ஏசுநாதர் கூறியிருப்பதைப்போல், நாங்கள் வரம் கேட்காமல் வழங்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ச. துரையப்பா அவர்கள்.

டாக்டர் ச. துரையப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர், பொன்மனச் செம்மல், கொடை வள்ளல், பாரத ரத்னா, டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி, பொன்னியின் செல்வி, மக்கள் தலைவர் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு

வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாமல்லபுரத்திலே பல்லவர்களால் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் இருக்கின்றன. அவை, கடலிலிருந்து வருகின்ற உப்புக் காற்றால் சிதிலமடைந்து வருகின்றன. அவற்றைப் பாதுகாப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களது அரசு ஏதேனும் ஆலோசனை வைத்திருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால் நன்றாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

221—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***56513—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைக் கிராமத்திலுள்ள அரசு ஆதி திராவிடர் உண்டி உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*